**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S. 130/2024**
**Examination of - PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | சுதாகர் |
| Father's Name | : | குமார் |
| **Village** | : | வேட்டவலம் |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | **35** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 17.07.2025.**

**முதல்விசாரணை**

நான் நீதிமன்றத்தில் வழக்கு 130/2024 தாக்கல் செய்து இந்த வழக்கில் இடைக்காலமாக IA.NO.1/2023என்ற மனுவினை தாக்கல் செய்து தற்காலி உறுத்துக்கட்டளை எதிர்மனுதாரருக்கு எதிராக பெற்றேன். இந்நிலையில் மேற்படி இடைக்கால தடை உத்தரவு நிலுவையில் இருந்த நிலையில் பிரதிவாதிகள் ரமேஷ் மற்றும் கம்சலா ஆகியோர் கடந்த 21.01.2025ம் தேதி 11 மணிக்கு எனது மேற்படி தாவா சொத்தில் நுழைந்து கொலைவெறி தாக்குதல் நடத்தி தனது இருசக்கர வாகனத்திற்கு சேதத்தை ஏற்படுத்தி மேற்படி நீதிமன்றத்தின் உத்தரவை அவமதித்ததாக அவமதிப்பு மனுவினை தாக்கல் செய்துள்ளேன் அதற்கு ஆதரவாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஆகியவை கடந்த 10.06.2024ம் தேதி வாதியான சுதாகருக்கு நீதிமன்றம் இடைக்காலமாக தடை உத்தரவு அளித்தது அந்த உத்தரவின் நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.1** ஆகும். 22.01.2025ம் தேதி மனுதாரரின் மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 22.01.2025ம் தேதியிட்ட மனுதாருக்கு ஏற்பட்ட காயத்தின் புகைப்படத்தை தாக்கல் செய்கிறேன். 29.01.2025ம் தேதியிட்ட மனுதாரரின் வழக்கறிஞர் எதிரிமனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ஒப்புகை அட்டையை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆகும். 27.01.2025ம் தேதியிட்ட ஆன்லைன் புகார் நகல் மற்றும் ஒப்புகை ரசீதின் கணிணி நகலை தாக்கல் செய்கிறேன்.அது **ம.சா.ஆ.3** ஆகும். 02.03.2025ம் தேதியிட்ட எதிர் மனுதாரர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள FIR கணிணி நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4**

ஆகும். 12.04.2025ம் தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கியுள்ள அடங்கள் ரத்து சான்றிதழன் கணிணி நகலை தாக்கல் செய்கிறேன். 17.12.2022ம் தேதியிட்ட மனுதாரர் பெயரில் வழங்கப்பட்ட தனி பட்டாவின் கணிணி நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.5** ஆகும். 09.09.2024ம் தேதியிட்ட எதிரி மனுதாரர்களின் மகள் யஷ்விதா பெயரையும் சேர்த்து வழங்கப்பட்ட கூட்டு பட்டாவினை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.6** ஆகும். 21.12.2024 தேதியிட்ட எதிர்மனுதாரர்களின் மகள் யஷ்விதா பெயரை நீக்கி வழங்கப்பட்டுள்ள தனிப்பட்டாவினை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.7** ஆகும். 11.04.2025 தேதியிட்ட மனுதார் பெயரில், வழங்கப்பட்டுள்ள புதிய அடங்கல் அசலினை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.8** ஆகும்.

**குறுக்குவிசாரணை**

குறுக்குவிசாரணை செய்ய எதிர் தரப்பு வழக்கறிஞர் அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.